# பிரிக்பீல்ட்ஸில் தீபாவளிக் கடைகள் அகற்றப்பட்டன



செய்தி, படங்கள்: எம்.முருகன்

பக்கம் 13

பிரிக்பீல்ட்ஸ், அக்.19-

பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் தீபாவளிக் கடைகள் போடப்பட்டுள்ளன. நேற்று டிபிகேஎல் அங்கு சென்று போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த நடுவில் உள்ள சில கடைகளை அகற்றி நடவடிக்கை எடுத்தனர்.

## தீபாவளிக் கடைகள்



இவை அனுமதியின்றிப் போடப்பட்ட கடைகள் ஆகும். அதோடு போக்குவரத்துக்கு இடையூறாகவும் மக்கள் நடப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினாலும் இந்தக் கடைகள் அகற்றப்பட்டன.

நேற்று காலையில் இந்தப் பணிகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் தன் குழுவினர்களோடு வந்து செய்து முடித்தது.

மேலும் மலேசிய வியாபாரிகள் கூறும்போது, வருடா வருடம் இந்த மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. நாங்களும் கடையைப் போட்டு விட்டோம். வியாபாரமும் செய்து வருகிறோம். நான்கு நாட்கள் மழை காரணமாக வியாபாரம் இல்லை. இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. நாங்கள் எங்கே போவது என்று தங்கள் நிலைமையைக் கூறினர்.